தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN (o): 3049-0723
[Impact Factor: 8.47] Monthly, Peer-Reviewed, Refereed, Indexed Journal with IC Value: 86.87
Volume - 1, Issue - 09, June - 2025

DOIs: https://doi.org/10.63300/tmXXXXXXXXXX --:-- Research Paper

# So. Dharman's Works: Karisal Cultural Traditions

**Dr. C. Pavithra**
Assistant Professor Department of Tamil Dr. SNS Rajalakshmi College of Arts and Science (Autonomous), Coimbatore.

***Abstract:*** *Culture serves as a framework for a group's way of life, encompassing their practices, shared values, and social behaviors. It is the lens through which a community organizes its existence and finds meaning. The acquisition of culture is multifaceted, often manifesting through four key virtues: moral principles guiding ethical conduct, material possessions reflecting technological and economic advancements, pursuits of pleasure and enjoyment, and the adoption of austerity, emphasizing simplicity and self-discipline. These virtues intricately weave together the internal (integral) and external aspects of human life, shaping individual and collective identities. The Tamil people boast a rich and enduring cultural heritage, deeply entrenched in their classical language, customs, and traditions for over two millennia. This legacy is vividly portrayed in their esteemed literature, recognized globally for its profound impact and influence on other cultures. The essence of Tamil culture and tradition rests on the integral and intellectual understanding of its people, prioritizing intrinsic values over purely economic considerations. The novels of So. Dharman, a recipient of the prestigious Sahitya Akademi Award, provide compelling examples of this value system. Dharman meticulously depicts the lives of the Urulaikkudi people, delving into their agricultural practices, ingenious water resource management techniques, and the diverse forms of worship, celebratory festivals, traditional medicine, age-old rituals, and deeply held conventional beliefs that permeate their existence. These elements are seamlessly integrated into their daily routines, highlighting the inseparable bond between culture and lived experience. This research paper aims to explore the rustic lives and practices of the Tamil people as portrayed by So. Dharman, illuminating the cultural nuances woven into their everyday activities. Through his literary lens, we gain a deeper understanding of the enduring traditions that define their identity. Ultimately, culture serves as the cornerstone of identity and a cherished inheritance for Tamil people, both within their homeland and across the global diaspora.*

***Key Words:*** *So.Tharman, culture, belief, Karisal land, worship, rituals.*

# சோ.தர்மன் படைப்புகளில் கரிசல் பண்பாட்டு மரபுகள்

**முனைவர் சி பவித்ரா,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, டாக்டர் எஸ்.என்.எஸ் இராஜலட்சுமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) கோவை.

***ஆய்வுச் சுருக்கம் :*** *கலாச்சாரம் என்பது சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட குழுவினரின் வாழ்க்கையை ஒழுங்கமைப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு வகையான நடைமுறை மற்றும் சமூக நடத்தை ஆகும். மனித வாழ்க்கையின் ஒருங்கிணைந்த மற்றும் வெளிப்புற பகுதியுடன் இணைக்கப்பட்ட ஒழுக்கம், பொருள், இன்பம் மற்றும் துறவு ஆகிய நான்கு நற்பண்புகள் மூலம் இதை அடைய முடியும். தமிழ் மக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக அதன் பாரம்பரிய மொழி, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தில் வலுவாக வேரூன்றி உள்ளனர். இந்த கலாச்சாரம் மற்றும் பாரம்பரியக் குறியீடு தமிழ் மக்களின் ஒருங்கிணைந்த மற்றும் அறிவுசார் நுண்ணறிவை அடிப்படையாகக் கொண்டது, அவர்களின் பொருளாதார மதிப்புகளைச் சார்ந்தது அல்ல, இந்த வகையான மதிப்புகள் சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் சோ தர்மனின் நாவல்களில் காணப்படுகின்றன. அவர் உருளைக்குடி மக்களின் வாழ்க்கையிலிருந்து அவர்களின் விவசாய நடைமுறைகள் மற்றும் நீர்வள மேலாண்மையை குறிப்பாக அவர்களின் வழிபாடு, திருவிழா, மருத்துவம், சடங்குகள் மற்றும்*

*பாரம்பரிய நம்பிக்கைகளின் பல்வேறு வடிவங்களில் சித்தரிக்கிறார். இவை அவர்களின் அன்றாட வாழ்க்கையுடன் நெருக்கமாக தொடர்புடையவை, மேலும் இந்த ஆராய்ச்சிக் கட்டுரை எழுத்தாளர் சோ தர்மனால் விவரிக்கப்பட்ட கிராமிய வாழ்க்கை, தமிழ் மக்களின் நடைமுறைகள் குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

***குறிப்பு சொற்கள்*** *: சோ தர்மன், பண்பாடு, நம்பிக்கை, கரிசல் நிலம், வழிபாடு, சடங்குகள்..*

## முன்னுரை:

பண்பாடு என்பது ஒரு சமூகத்தின் அடையாளம். அது தலைமுறை தலைமுறையாக கடத்தப்படும் அறிவு, நம்பிக்கைகள், கலை, ஒழுக்க நெறிகள், சட்டங்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் திறன்களை உள்ளடக்கியது. ஒவ்வொரு நிலப்பரப்பிற்கும், சமூகத்திற்கும் தனித்துவமான பண்பாட்டு மரபுகள் உள்ளன. கரிசல் நிலம் தனது தனித்துவமான புவியியல் மற்றும் சமூகக் காரணிகளால் ஒரு தனித்துவமான பண்பாட்டைக் கொண்டுள்ளது. கரிசல் மண்ணின் வறண்ட நிலப்பரப்பு, விவசாய வாழ்க்கை முறை, மக்களின் மன உறுதி, நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் ஆகியவை இணைந்து ஒரு தனித்துவமான பண்பாட்டு மரபை உருவாக்கியுள்ளன.

சோ.தர்மன் கரிசல் நிலத்தின் முக்கியமான எழுத்தாளர்களில் ஒருவர். அவரது படைப்புகள் கரிசல் மக்களின் வாழ்க்கை, அவர்களின் நம்பிக்கைகள், சவால்கள் மற்றும் பண்பாட்டு மரபுகளை ஆழமாகப் பதிவு செய்கின்றன. அவர் கரிசல் நிலத்தின் வட்டார மொழியைப் பயன்படுத்தி, அந்த மண்ணின் மணத்தை தனது எழுத்துக்களில் கொண்டு வருகிறார். அவரது படைப்புகள் கரிசல் மக்களின் வாழ்வியலை பிரதிபலிக்கும் கண்ணாடியாக உள்ளன.

கல்தோன்றி மண்தோன்றா காலத்தே வாளொடு முன்தோன்றியவர்கள் தமிழர்கள் அவர்கள் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கியதை அகச்சான்றுகளும் புறச்சான்றுகளும் ஆவணப்படுத்தியுள்ளன. அப்பண்பாடு என்பது நம்பிக்கை, பழக்கவழக்கம், சமுதாய அக்கறை, கலை போன்ற பல்வேறு கூறுகளைக் கொண்டது அவை போன்ற சிறந்த பண்புகளால்தான் மனிதன் விலங்குகளிடமிருந்து வேறுபட்டு நிற்கிறான். அவன் உள்ளத்தில் சிறந்த அனுபவங்கள் நிறைந்து அவை பண்பாடுகளாக உருப்பெறுகின்றன. மக்கள் வாழும் பகுதி கிராமம், நகரம் என இரண்டு பிரிவுகளைக் கொண்டது. கிராமம் என்பதற்கு நாட்டுப்புறம் என்ற வேறு பெயரும் உண்டு அந்நாட்டுப்புறம் இயற்கை வளங்கள் நிறைந்த விவசாய நிலங்களையும் காடுகளையும் தன்னகத்தே கொண்டது. இவ்வுலகம் நிலைத்திருப்பதற்கு அடிப்படை காரணம் நாட்டுப்புறமே. அப்பகுதியில் வாழும் மக்கள் பழந்தமிழர்களின் வாழ்வியல் நெறிகளைப் பாதுகாப்பவர்களாகத் திகழ்கின்றனர். அவர்கள் இயற்கையோடு இயைந்து, பாரம்பரிய மரபுகளைப் பின்பற்றி வாழ்கின்றனர். முன்னோர்கள் செய்த செயல்களில் உண்மைத்தன்மையும், நன்மையும் இருப்பின் அவற்றை பின்வரும் தலைமுறையினர் கடைபிடித்து வாழ்வது மரபு ஆகும். அதனடிப்படையில், 'சோ.தர்மன் புதினங்களில்' காணக்கிடக்கும் நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் மரபுகளை அடையாளப்படுத்தும் விதத்தில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### சோ.தர்மன்: ஒரு அறிமுகம்

சோ.தர்மன் ஒரு தமிழ் எழுத்தாளர் மற்றும் சாகித்ய அகாடமி விருது வென்றவர். அவர் உருளைக்குடி கிராமத்தில் பிறந்தார். கரிசல் நிலத்தின் விவசாய வாழ்க்கை முறையையும், அங்குள்ள மக்களின் போராட்டங்களையும், நம்பிக்கைகளையும் தனது படைப்புகளில் சித்தரிப்பதில் வல்லவர். அவரது முக்கியமான படைப்புகளில் 'சூல்', 'சோகவனம்', 'தர்மம்' மற்றும் 'கூகை' ஆகியவை அடங்கும்.

சோ.தர்மனின் எழுத்துக்கள், கரிசல் நிலத்தின் மக்களின் வாழ்க்கையை ஆழமாகப் புரிந்துகொள்ள உதவுகின்றன. அவர் அந்த மக்களின் மொழி, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் மற்றும் சடங்குகளை துல்லியமாகப் பதிவு செய்கிறார். அவரது படைப்புகள் கரிசல் பண்பாட்டின் ஒரு ஆவணமாகக் கருதப்படுகின்றன.

**சோ.தர்மன் படைப்புகளில் கரிசல் பண்பாட்டு மரபுகள்**

சோ.தர்மனின் படைப்புகளில் காணப்படும் கரிசல் பண்பாட்டு மரபுகளை பின்வரும் தலைப்புகளின் கீழ் ஆராயலாம்:

**பண்பாடு**

மனித இனம் அறிவு நிலையில் வளர்ந்து, சிறந்த ஒழுக்க நெறிகளைப் பின்பற்றும் சமூகமாக மாறும் நிலையைப் பண்பாடு என்பர். பண்பாடு மனித உள்ளத்தோடு தொடர்புடையது. மனித இனத்தின் அறிவு வளர்ச்சியின் வெளிப்பாடும், மனிதனை பிற உயிரினங்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டக்கூடியதும் பண்பாடாகும். மக்களின் சமூக வாழ்க்கையின் வளர்ச்சி கருதி, பாங்கு அறிந்து, பெருமை உணர்ந்து, பயன் தெரிந்து ஒழுகும் பண்பைதான் பண்பாடு என்று தமிழ்ச் சான்றோர் குறிப்பிடுகின்றனர். ஓர் இனத்தின் பண்பாடு அவ்வினத்தைப் பிற இன மக்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. ஒவ்வொரு இனக்குழுவுக்கும் தனக்கென தனித்த பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குமுறைகள் என எண்ணிலடங்கா வேறுபாடுகளை முதன்மையாகக் கொண்டே அமைந்துள்ளன.

மா.இராமலிங்கம் என்பவர், “பண்பாடு என்பது காலங்காலமாக ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரிடம் வழிவழியாக தொடர்ந்து வருகிற சில அகப்புற ஒழுங்கு முறையைக் குறிப்பதாகும். சமூகக் குழுக்கள் தம் வசதி கருதியும் கட்டுக்கோப்பை முன்னிட்டும் சிலவற்றை உயர்ந்ததென்றும் விழுமியமென்றும் கருதி அவற்றை நடைமுறை ஒழுகலாறாக தழுவிக் கொள்ளும் நிலையில் உருவாவது பண்பாடு ஆகும்.” என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு குறிப்பிட்ட இனம் சார்ந்த மக்களின் தனித்துவத்தை அறிந்துக்கொள்வதற்கு அவர்களின் வாழ்வோடு பிண்ணிப் பிணைந்துள்ள பண்பாட்டு மரபுகளை அறிந்துக்கொள்வது அவசியமாகிறது. அவ்வகையில் சோ.தர்மன் புதினங்களில் காணப்படும் மக்களின் அறநெறிகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், திருவிழாக்கள், சடங்குகள் போன்றவற்றை இங்கு காணலாம்.

**பழக்க வழக்கங்கள்**

பழக்கம் என்பது சூழ்நிலைக்கும் தேவைக்கும் ஏற்ப தனிமனிதனிடம் வேர்விடுகின்ற செயல்பாட்டின் வடிவமாகும். “பழக்கம் என்பதற்கு இணையான ஆங்கிலச் சொல் ‘Habit’ பல தனிமனிதர்களின் பழக்கங்கள் ஒரு குழுவின், ஒரு இனத்தின், சமுதாயத்தின் தொடர்ப் பழக்கங்களாக வளர்ந்து மரபாக முற்படும்பொழுது அது வழக்கம் என்ற நிலைக்கு உயர்கிறது.” என்கிறார் பாக்கியாமேரி. பழக்கம் என்பது தனிமனிதனைச் சார்ந்த தொடக்கநிலை. வழக்கம் என்பது சமுதாயம் சார்ந்த தொடர் நிலை. தனிமனிதன் ஒருவன் பழகிப்போன முறையில் திரும்பத் திரும்பச் செய்துவரும் ஒரு குறிப்பிட்ட செயலைப் பல மனிதர்கள் ஒன்றாகச் சேர்ந்து செய்கின்ற பொழுது அது வழக்கமாகிறது. குறிப்பிட்ட பழக்க வழக்கங்கள் ஓர் சமுதாயத்தில் தொன்றுதொட்டு நிலைபெறும் பொழுது மரபு என்ற வடிவத்தைப் பெறுகிறது. ஒவ்வோர் சமூகத்துக்கும் தனித்தன்மைக் கொண்ட பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் அச்சமூகத்தின் தொன்மைச் சின்னங்களாகவும், பண்பாட்டு மரபுகளாகவும் விளங்குகின்றன. அவ்வகையில் சோ.தர்மன் புதினங்களில் கடைப்பிடிக்கப்பட்ட பழக்கவழக்கங்களை ஆய்வதன் மூலம் கரிசல் மக்களின் தனித்தன்மையையும் பண்பாட்டு மரபையும் இனங்கண்டு கொள்ளலாம்.

கிராமத்திலுள்ள அனைவரும் சேர்ந்து, ஒரு நடைமுறையினை பின்பற்றுவது சமூகம் சார்ந்த பழக்கவழக்கமாகிறது. கிராமத்தில் எந்தவொரு பொது நிகழ்வு நடைப்பெறும் போதும் அதனை ஊர்

மக்களுக்கு முன்பே அறிவிக்கும் ‘ஊர்சாற்றுதல்’ வழக்கம். ஊர் பஞ்சாயத்து நடைப்பெறும் பொழுதும், கண்மாய் நடை திறக்கும் பொழுதும் அடைக்கும் பொழுதும் ஊர்சாற்றுதலை ‘சூல்’ புதினம் பதிவு செய்கிறது. தொத்தல்பகடை என்னும் அருந்ததிய சமூக மக்களே ஊர்சாற்றும் பணியைச் செய்கின்றனர். “அய்யாமாரே, அம்மாமாரே, நல்லா கேட்டுக்கோங்க சாமிமாரே! நாளைக்கு நம்ம ஊரு கண்மா நட சாத்தப்போராங்க.” என்னும் வரிகளில் கிராமத்தில் நடைப்பெறும் நிகழ்வுக்கு அனைவரும் தவறாது பங்குபெற வேண்டுமென்ற செய்தியை அறிவிக்க ஊர்சாற்றுதல் என்னும் நடைமுறை வழக்கத்தில் உள்ளது வெளிப்படுகிறது.

கிராமத்திற்கு புதிதாக யாரேனும் அடைக்களம் வேண்டி வந்தால் ஊரிலுள்ள பொது மடத்தில் தங்கிக்கொள்ளலாம். அவர்களுக்கு வேண்டிய உணவினை அவ்வூர் இளைஞர்கள் ஒவ்வொரு வீடுகளிலிருந்தும் வாங்கிவந்து தருவர். தங்கள் ஊரினை நம்பி வந்தவர்கள் உணவுக்காக தட்டேந்தி யாசகம் வாங்கக் கூடாதென்பது கரிசல்நில மக்கள் பின்பற்றும் வழக்கமாகும். இந்நடைமுறையினை ஆசிரியர் ‘சூல்’ புதினத்தில் பதிவு செய்கிறார். இதனை, “திருவோடு, வேல், சின்ன துணி மூட்டை, கூட்டத்தை வெறித்துப் பார்த்தான் பண்டாரம், பெரும்பாலும் ஊருக்கு வரும் பண்டாரங்கள், பரதேசிகள் தங்கினால் ஊர் இளவட்டங்களே தெருவில் போய் வீடு வீடாக சோறுவாங்கி வந்து கொடுப்பது வழக்கம். எக்காரணம் கொண்டும் சோற்றுக்காக தெருவில் வந்து கையேந்திவிடக் கூடாது என்பது பள்ளக்குடித் தெருவில் பரம்பரையாய் உள்ள பழக்கம். வித்தைக்காரர்கள் வரலாம். தானியப் பிச்சை மட்டுமே வாங்க வேண்டும். சோற்றுப் பிச்சை கிடையாது. உள்ளூர் இளவட்டங்கள் வாங்கிக்கொடுத்தால் ஒழிய யாருக்கும் சோற்றுப் பிச்சை கிடையாது.” பள்ளர் சமூக மக்களிடம் காணப்படும் இத்தகைய பழக்கமானது, இம்மக்கள் விருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்கியுள்ளனர் என்பதை வெளிபடுத்துவதாக அமைகிறது.

**அன்ன உத்திரம்**

அன்ன உத்திரம் என்பது உணவிற்கு உத்திரவாதம் என்பதாகும். கிராமங்களில் பெற்றோர்கள் தங்கள் முதுமைக் காலங்களில் தங்கள் பிள்ளைகளுக்குச் சொத்துகளைப் பகிர்ந்து கொடுப்பர். அவ்வாறு கொடுக்கும்போது பிள்ளைகளின் உழைப்பில் வாழ விரும்பாதவர்கள் தங்களுக்கென ஒரு பங்கை எடுத்து வைத்துக்கொள்வர். முதுமைக் காலத்தில் பெற்றோர்களைக் கவனித்துக்கொள்ளும் பிள்ளைக்கு அவர்களின் கடைசி சொத்து கொடுக்கப்படும். முதியவர்கள் வயதான காலத்தில் உணவுக்குச் சிரமப்படாமல் மரியாதையாக கவனிக்கப்படுவதற்காக அத்தகைய நடைமுறை கிராமங்களில் கையாளப்பட்டுள்ளது. இன்றைக்கு மறைந்த இத்தகைய வழக்கத்தை ஆசிரியர் ‘கூகை’ புதினத்தில், “நாளையிலிருந்து இந்த வீடும் ஒனக்குதான். வயக்காடும் ஒனக்குதான். ஒன்னோட மக்கள்ள யாரு உனக்கு கஞ்சி ஊத்துராங்களோ அவனுக்கு இத எல்லாத்தையும் நீ குடுத்திரு அதுவரைக்கும் கை மொதலுக்கும் சாவு மொதலுக்கும் ஒங்கிட்டயே இருக்கட்டும்.” என்ற வரிகளில் காணமுடிகிறது. மேலும், அந்தக் காலத்தில் சட்டரீதியாகப் பெண்களுக்குச் சொத்தில் பங்கு கிடையாது. ஆனால் கிராமங்களில் நடைமுறையில் பெண்களுக்குச் சொத்து பகிர்ந்தளிப்பது உண்டு. திருமணமான பெண்கள் புகுந்த வீட்டில் ஏற்படும் சண்டைகளால் பிரிந்து வந்துவிட்டால், தன் சகோதரர்களின் வீட்டிற்கு செல்லாமல் தன் பெற்றோருடன் தங்கி அவர்களையும் கவனித்துக்கொள்வர். அப்போது அவர்களுக்குக் அன்ன உத்திர சொத்துக்களே கைகொடுத்து உதவுகிறது.

**நம்பிக்கைகள்**

ஒரு சமூகத்தின் பண்பாட்டு மரபினை அறிவிக்க வல்லன அச்சமூகத்தின் நம்பிக்கைகளாகும். மனித வாழ்க்கை நம்பிக்கைகளால் ஆனது. அவை சமூகத் தேவை மற்றும் குறிக்கோள்களின் அடிப்படையில் தோன்றியன. மனிதனின் தன்னல உணர்வும் சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. நம்பிக்கைகள் என்று தோன்றின என்பதைக் கண்டறிந்து கூற இயலாத அளவிற்கு தொன்மையானதும், மரபுவழிப்பட்டதுமாகும். நம்பிக்கைகள், இயற்கையால் படைக்கப்பட்டுள்ள பொருள்களுக்கும், மனிதனின் செயல்களுக்கும், தொடர்புண்டு என்ற கருத்தேற்றத்தின் அடிப்படையில் அவை தோன்றியனவாக காட்சியளிகின்றன.

நம்பிக்கைக் குறித்து கூறும் சு.சக்திவேல், "நம்பிக்கைகள் பெரும்பாலும் அச்சவுணர்வின் அடிப்படையாகத் தோன்றியதாகக் காட்சியளித்தாலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராதபொழுதும் மனித வாழ்வில் ஏற்படுகின்ற சில நிகழ்வுகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத பொழுதும் மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன." மனித சிந்தனைக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகளே நம்பிக்கைகளாக உருப்பெறுகின்றன என்கிறார்.

இன்றைய நாகரிக மனிதனிடம் காணப்படும் பல நம்பிக்கைகள் நாகரிகமற்ற பழங்குடி மக்களிடமும் காணப்படுகின்றன. எனவே நம்பிக்கை என்று தோன்றியது என வரையறுப்பது இயலாத ஒன்றாகும். அவை பெரும்பாலும் நாகரிகம் தோன்றாத காலத்தில் வாழ்ந்த மக்களிடம் தோன்றி நிலை பெற்றனவாகக் இருக்கலாம். நம்பிக்கை என்பது ஒன்றைப் பற்றிய உண்மையை ஏற்பது என்பதைவிட, ஒன்றின் மீதுள்ள விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள எடுக்கும் முயற்சி என்பது பொருந்தும். விருப்பங்களின் அடிப்படையில் தோன்றிய இந்நம்பிக்கை காலப்போக்கில் மந்திர, தந்திரங்களோடும் தொடர்புக் கொண்டு சடங்குகளாக மாறின. இதுகுறித்து,

"பழங்குடி நிலையிலிருந்த மனிதன் நாகரீகம் அடைந்தாலும் பழங்குடி மனநிலை அவனைவிட்டுப் போகவில்லை. பழங்கால மனிதன் தன்னைச் சுற்றி நடக்கின்ற காரியங்களுக்கு காரணங்கள் கண்டுபிடிக்க இயலாத நிலையில் இருந்தான். பின்னர் இயற்கையைக் கட்டுப்படுத்த விரும்பிச் செய்வினையில் ஈடுபட்டான். செய்வினை ஆதிக்கம் குறைந்த சமுதாயத்தில் செய்வினைபற்றிய நம்பிக்கைகள் நாட்டுபுற நம்பிக்கைகளாக மாறின. சமூக நீதியானது சமூக மாற்றத்திற்குப் பின் நாட்டுப்புற நம்பிக்கையாக மாறிற்று." என்று சு.சக்திவேல் நம்பிக்கையின் தோற்றத்தை எடுத்துரைக்கிறார்.

**நிமித்தங்கள்**

நிமித்தங்கள் என்பது வாழ்வில் பின் நிகழவிருக்கும் நன்மை தீமைகளைச் சில குறியீடுகளின் வாயிலாக முன்னுணர்த்துவதாகும். இதனை சகுணம் எனக் குறிப்பிடுகிறோம். பழங்காலத் தமிழர் இதனை புள், நிமித்தம் ஆகிய இரு சொற்களால் சுட்டியுள்ளனர். வருங்காலத்தில் நடக்கவிருப்பதை முன்னறிவிக்கும் அறிகுறியாக நிமித்தங்களை மக்கள் கருதுவதனைப் பண்டுதொட்டு இன்றுவரையுள்ள சமூகங்களின் வாழ்வியல்கள்; உணர்த்தி நிற்கின்றன. பழந்தமிழரது நம்பிக்கைப் பரந்துபட்டவை. நிமித்தம் என்பது வாழ்வில் நிகழவிருக்கும் நன்மை தீமைகளை சில குறியீடுகளின் வாயிலாக முன்னமே உணர்த்துவதாகும். நிமித்தங்களை அவற்றின் செயற்பாட்டு விளைவுகளை அடிப்படையாக வைத்து நன்னிமித்தம், தீயநிமித்தம் என வகைப்படுத்தப்படுகின்றனர். இதனை, "நிமித்தங்கள் பெரும்பாலும் மனித மனம் முடிவெடுக்க இயலாத சூழ்நிலைகளில் தோன்றுவனவாகவே காட்சி தருகின்றன. மனிதன் ஆற்றப்புகும் செயல்களுக்கும், இயற்கையில் நிகழும் நிகழ்வுகளுக்கும் ஒருவிதத் தொடர்பு இருப்பதாக மனிதமனம் கற்பித்துக் கொண்ட நிலையில் நிமித்தக்கூறுகள் உருவாகத் தொடங்கின. காலப்போக்கில் வாழ்வியலில் தொடர்ந்து நிகழ்ந்த நிகழ்ச்சிகளோடு இவ்வியற்கை நிகழ்வுகள் இயைந்து நோக்கப்பட்ட நிலையில் அவை நிமித்தங்களாக வடிவெடுத்தன." என க.காந்தி குறிப்பிடுவதன் மூலம் அறிந்துக்கொள்ள முடிகிறது.

சோ.தர்மன் புதினங்களில், காக்கையின் எச்சம் தலையில் விழுந்தால் இறப்பு நேரும், வெளியில் செல்லும் போது பருந்து தலைக்கு மேல் பறந்தால் செல்லும் காரியம் வெற்றியடையும், சாக்குருவி சத்தம் போட்டால் இறப்பு நேரும், ஏதேனும் நற்காரியமாக வெளியில் செல்லும்போது சகுணம் பார்த்து புறப்பட வேண்டும் என்ற பழக்கததைக் கரிசல்நில மக்கள் கொண்டிருப்பதை ஆசிரியர் 'பதிமூனாவது மையவாடி' புதினத்தில் குறிப்பிடுகிறார்.

**திருவிழாக்களும் சடங்குகளும்**

கரிசல் மக்கள் பல்வேறு திருவிழாக்களைக் கொண்டாடுகிறார்கள். பொங்கல், தீபாவளி, மற்றும் கிராம தேவதைகளின் திருவிழாக்கள் முக்கியமானவை. இந்த திருவிழாக்கள் சமூக ஒற்றுமையை

வலுப்படுத்துகின்றன. அவர்கள் திருமணம், இறப்பு மற்றும் பிற முக்கியமான நிகழ்வுகளின்போது பல்வேறு சடங்குகளை மேற்கொள்கிறார்கள். இந்த சடங்குகள் அவர்களின் பாரம்பரிய நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்களை பிரதிபலிக்கின்றன.

சோ.தர்மனின் படைப்புகளில் இந்த திருவிழாக்களும் சடங்குகளும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன. அவர் அந்த சடங்குகளின் நோக்கத்தையும், அவற்றின் பின்னணியில் உள்ள நம்பிக்கைகளையும் விளக்குகிறார்.

**சடங்குகள்**

மனித வாழ்வில் ஒவ்வொரு காலகட்டத்திலும் பழக்க வழக்கங்கள் தமது குடும்பத்தின் மரபுகளையும், இனத்தின் வழக்குகளையும் தனித்துக் காட்டுகின்றன. அதன் அடுத்த நிலையில் சமுதாயத்தில் பல இனத்தவர்களின் சிறப்புப் பண்பாடுகளையும் உலகிற்கு எடுத்துக் கூறுவதில் சடங்குகள் மிக இன்றியமையாததாக அமைகின்றன. ஓர் இனத்தின் அல்லது குடும்பத்தில் உள்ள முன்னோர்கள் மேற்கொண்ட செயல்களை அடுத்த தலைமுறையினர் காரணக் காரியங்களின்றி பின்பற்றி வருவதைச் சடங்குகள் எனக்கொள்ளலாம்.

“வழிவழியாக வரும் பழமரபுகளைக் காத்தல் மனித மனதின் வேரூன்றிய செயலாகும். சடங்குகள் இப்பணிக்கு பெரிதும் துணைபுரிகின்றன. முன்னோர் செய்த செயல்களை காரண காரிய ஆராய்ச்சியில் ஈடுபடாமல் தாம் கண்டவாறே பின்பற்றுவதும் நிகழ்த்துவதும் சடங்கின் முறை எனச் சடங்கின் தன்மையைப் பற்றி வாழ்வியற் களஞ்சியம் குறிப்பிடுகின்றது.

மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரையிலும் பல்வேறு சடங்குகளைத் தம் வாழ்வில் மேற்கொண்டு வருகிறான். அவற்றுள் சோ.தர்மன் புதினங்களில் வழிபாட்டுச் சடங்கு குறித்த பதிவுகளே அதிகமாகக் காணப்படுகிறது. கிராமங்களில் சிறுதெய்வ வழிபாடுகளில் நேர்த்திக் கடன் செலுத்துதல் என்பது சடங்குகளில் முக்கியமான ஒரு நிகழ்வாகும். சுருக்கமாக ‘நேமிக்கம்’ என்ற வார்த்தையைப் பயன்படுத்துவர். மக்கள் பின்பற்றிய சில வழிபாட்டு முறைகளில் நேர்த்திக்கடன்கள் செலுத்துதல் என்பது நன்றியின் வெளிப்பாடாக அமைகிறது. தாங்கள் நினைக்கின்ற காரியத்தை நிறைவேற்றி வைத்தால் நினைத்த காணிக்கையைச் செலுத்துவதாக தாங்கள் வழிபடும் தெய்வங்களை வேண்டிக்கொள்வதே நேர்த்திக் கடனாகும். பொங்கல் வைத்து வழிபடுதல், முடி காணிக்கையாக கொடுத்தல், அக்னி சட்டி எடுப்பது, காவடி எடுத்தல், மாவிளக்கு எடுத்தல், கிடாய் வெட்டுதல், கும்பிடு சோறு போடுதல் போன்ற பல்வேறு சடங்குகள் உண்டு. ஒவ்வொரு தெய்வத்திற்கும் சடங்குகள் மாறுபடும். தாம் வேண்டிக்கொண்ட காரியம் நிறைவேறினாலோ குறிகேட்கும் போது தெய்வம் படையலிடச் சொன்னாலோ அதனை நிறைவேற்றுவதனை நேர்த்திக்கடன் நிவர்த்தித்தல் என்பர்.

‘சூல்’ புதினத்தில் மயிலு என்னும் நிறைமாத கர்ப்பிணிப் பெண் தன் குழந்தைப்பேற்றை நினைத்து வருந்தும் சமயத்தில் அவளது தாய்நம்பிக்கைக் கொடுக்கும் விதமாக,“ஓம் கணவன் வீட்டு பொலதாம்பரம் கோயிலுக்கு கெடா வெட்டி, பொங்க வெச்சு பேர் விடுறம்னு நேந்துக்கோ எல்லாம் சரியாப் போகும். என்கிறாள். இத்தகைய வேண்டுதல்கள் செய்வதனால் இறைவன் நல்வழி காண்பிப்பார் என்பது மக்களின் நம்பிக்கை.

அருந்ததியர் சமூகத்தினர் வழிபடும் தெய்வமான உளிகருப்பன் குறித்து ஆசிரியர் பதிவு செய்கிறார். அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த மாதாயி தன் சமூகத்தைச் சேர்ந்த கருப்பன் என்பவனால் கரப்பமடைந்து ஏமாற்றப்படுகிறாள். ஊர்கூட்டத்தில் கருப்பன், மாதயி சுமக்கும் குழந்தைக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்று தன்மேல் சுமத்தப்பட்ட குற்றத்தை மறுத்துவிட்டான். தான் ஏமாற்றப்பட்டதை ஏற்க முடியாத மாதாயி, தன் நிறைமாதத்தின் போது கருப்பன் வரும் வழியில் உளியைக் கொண்டு தாக்கி கருப்பனைக் கொலை செய்கிறாள். அதோடு தன் வயிற்றில் இருக்கும் குழந்தையை அறுத்து எடுத்து கருப்பன் மேல் வீசி அவளும் அவ்விடத்திலேயே இறந்து போகிறாள்.

இவ்வாறு கொடூரமாக இறந்தவர்களுக்கு அவ்விடத்திலேயே அம்மக்கள் கல்நட்டு குலதெய்வமாக வணங்கி வருகின்றனர். மாதாயி தன்னை வணங்கும் பெண்களுக்குத் திருமண பாக்கியம், குழந்தை வரம் வேண்டுவோர்க்கு குழந்தைவரம் தந்து காப்பதாக மக்கள் நம்பிக்கையுடன் வழிபடுகின்றனர். இக்கோவிலுக்கு எட்டயப்ப மகாராஜா வந்து வழிபட்டு சென்ற குறிப்புகள் உள்ளதாக ஆசிரியர் பதிவு செய்கிறார். இதுகுறித்து 'சூல்' புதினத்தில் பின்வருமாறு ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

"ஊருக்குள் நுழையும் பெரும் பாதையின் முகப்பில் உளிக் கருப்பன் கோயில். சக்கிலிக்குடி ஜனங்களின் துடிப்பான சாமி. இரண்டு வருடத்திற்கு ஒருமுறை நடக்கும் உளிக்கருப்பன் சாமி திருவிழா பிரசித்தம். எட்டயபுரம் மன்னரே நேரில் வந்து தரிசித்துச் சென்றதாக ஐதீகம். ஆனால் இன்றைக்கும் திருவிழாவின் போது அரண்மனை பிரதிநிதி வந்து விபூதி பெற்றுச் செல்லும் சடங்கு தொடர்கிறது."என்று சிறுதெய்வ வழிபாடு குறித்து ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

**தெய்வ வழிபாடும் நம்பிக்கைகளும்**

கரிசல் மக்கள் பல்வேறு தெய்வங்களை வழிபடுகிறார்கள். கிராம தேவதைகள், குலதெய்வங்கள் மற்றும் இயற்கை சக்திகள் அவர்களின் வழிபாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றன. சோ.தர்மன் தனது படைப்புகளில் இந்த தெய்வங்களின் பெயர்களையும், அவர்களை வழிபடும் முறைகளையும் விவரிக்கிறார்.

அவர்கள் பேய், பிசாசு மற்றும் பிற இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளையும் நம்புகிறார்கள். அவர்கள் நோய்கள் மற்றும் துன்பங்களுக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளே காரணம் என்று நம்புகிறார்கள். இதற்காக, அவர்கள் மந்திரவாதிகள் மற்றும் பூசாரிகளின் உதவியை நாடுகிறார்கள்.

**குலதெய்வம்**

குலத்தினைத் தொன்றுதொட்டு காக்கும் தெய்வம் குலதெய்வம். தெய்வங்களில் மிகவும் வலிமை வாய்ந்ததாகவும் எளிதில் அருளை வழங்கக் கூடியதாகவும் மற்ற தெய்வ வழிபாடுகளின் பலன்களையும் பெற்றுத் தரக்கூடியதாகவும் குலதெய்வங்கள் அமைகின்றன. குலதெய்வங்கள் பற்றி துளசி இராமசாமி கூறுகையில் "மக்களோடு இருந்து வாழ்ந்தவர்கள் தெய்வ நிலைக்கு உயர்ந்து குலதெய்வங்களாகிறார்கள். இதுதான் திராவிட இனத்தின் பொதுவான குலதெய்வமுறை" என்று குறிப்பிடுகிறார். குடும்பநலன் பொருட்டு வாழ்ந்து உயிர் துறந்த ஒருவரை அக்குடும்ப வழியினர் தெய்வ நிலைக்கு உயர்த்தியுள்ளனர். ஆகையால், அக்குறிப்பிட்ட குடும்பத்தவர்களுக்குக் குடும்ப தெய்வமாக விளங்கிய தெய்வம், உறவுமுறை விரிவடையும்போது குலதெய்வமாக மாறுகிறது. இக்குலதெய்வ வழிபாட்டின் சிறப்பினைக் குறித்து ஆசிரியர் 'வெளவால் தேசம்' புதினத்தில் எடுத்துரைக்கிறார்.

"அய்யா எங்களுக்கு ஊரு இந்த ஊரு கெடையாது, ரொம்ப தூரம் உருளைக்குடி, அதுவும்போக இங்க வந்திருக்கிற ஜனங்க ஒரே ஊரு கெடையாது, நாளா ஊர்லந்தும் வந்திருக்காங்க. இது எங்க குலதெய்வம், பரம்பர பரம்பரையா நாங்க இதைத்தான் கும்பிடுறோம். எங்க வம்சத்துல யாருக்கு முதல் குழந்தை பிறந்தாலும் இந்தச் சாமியோட பேரு வச்சு மொட்டை போடுறது எங்கக் குலவழக்கம் துரைகளே. எங்க முப்பாட்டன், பாட்டன், அப்பன், அவங்களோட காலத்தடம் பட்ட இடம். அதே எடத்துல அவங்க பாதத்துக்கு மேல எம்பாதம் படனும், என் கால்தடம் பட்ட எடத்துல என் மகனோட கால்தடமும், அவனோட கால்தடத்து மேல என் பேரனோட கால்தடமும் படணும், அந்த நம்பிக்கையை நாங்க விடவே மாட்டோம் துரை." பல்வேறு காரணங்களால் வெளியூர்களுக்குச் சென்று அங்கே நிரந்தரமாய் தங்கி வாழும் மக்கள், தங்கள் வாழ்வின் முக்கியமான தருணங்களில் குலதெய்வ வழிபாட்டிற்காக தங்களின் பூர்வீக இடத்திற்கு வருகின்றனர். இக்கூற்றின் வழிகுலதெய்வ வழிபாட்டின் முக்கியத்துவத்தை ஆசிரியர் சுட்டுகிறார்.

### சமூக உறவுகளும் வாழ்க்கை முறையும்

கரிசல் மக்கள் வலுவான சமூக உறவுகளைக் கொண்டுள்ளனர். அவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து, கஷ்டங்களை பகிர்ந்து கொள்கிறார்கள். அவர்களின் வாழ்க்கை முறை எளிமையானது மற்றும் இயற்கையோடு இணைந்தது. சோ.தர்மன் தனது படைப்புகளில் அவர்களின் சமூக உறவுகள் மற்றும் வாழ்க்கை முறையை யதார்த்தமாக சித்தரிக்கிறார்.

அவர்களின் பேச்சு வழக்கு, உணவுப் பழக்கம் மற்றும் உடைகள் ஆகியவை தனித்துவமானவை. இந்த அம்சங்கள் கரிசல் பண்பாட்டின் ஒரு அங்கமாகும்.

### காவல் தெய்வ வழிபாடு

காவல் தெய்வம் என்பது நம்மை அனைத்து சூழ்நிலைகளிலும் காத்து வருகின்ற தெய்வம். ஓர் ஊரையோ, நிலப்பரப்பையோ, பண்பாட்டையோ, தொழிலையோ காப்பதாக மக்களால் கருதப்பட்டு வழிபட்டுவரும் தெய்வமாகும். இக்காவல் தெய்வங்கள் ஒரு காலத்தில் மனிதனாக இருந்து பின் தெய்வமாக மாறி அருள்பாலித்து வருகின்றன என்று நம்பப்படுகின்றன. பண்டைக் காலந்தொட்டு ஊரின் நன்மைக்காக உயிர்விட்ட ஒருவருக்கு நடுகல் எடுத்து தெய்வமாக வழிபட்டு வருவது மரபு. கிராமங்களில் வேளாண்மை நீர்பாசனத்திற்காக கட்டப்படும் ஏரிகளில் அதிகமாக மழை பெய்யும் சமயங்களில் ஏரியின் மடை திறக்காவிட்டால் நீர் நிறைந்து மடை உடைபட்டு கிராமம் பாதிக்கப்படும். இத்தகைய சூழலில் மடையைத் திறக்கப்போகும் ஏரியை பராமரிக்கும் நீர்பாய்ச்சியை ஊர்மக்கள் அனைவரும் கூடி வணங்கிவிட்டு அவ்வூரிலுள்ள மக்களை கிராமத்தைவிட்டுபாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பர். மடை திறக்கும்போது தண்ணீர் முழு வேகத்துடன் வெளியேறுவதால் நீர்பாய்ச்சி உயிரிழக்கக் கூடும். இவ்வாறு உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு நிலம் வழங்கி ஊர்மக்கள் பார்த்துக்கொள்வர். உயிரிழந்தவருக்குச் சிலைவைத்து கடவுளாக வணங்குவர். இத்தகைய காவல் தெய்வம் குறித்து ஆசிரியர் ‘சூல்’ பதிவு செய்கிறார். உருளைக்குடி கிராமத்தின் கண்மாயில் நடவுக்காக திறக்கப்பட்ட மடைகளில் ஒரு மடையில் தண்ணீர் வராமல் அடைத்துவிட்டது. அதன் அடைப்பை திறந்துவிடுவதற்காக அவ்வூரிலுள்ள மடைக்குடும்பனான கருப்பன் நீரினுள் மூழ்கி அடைப்பை எடுத்துவிட்டான். அடைப்பினை எடுப்பதற்கு வெகுநேரம் நீருக்குள் மூழ்கியிருந்ததால் மூச்சஅடக்க முடியாமல் இறந்துவிட்டான். இவ்வாறு ஊரின் நன்மைக்காக உயிர்விட்ட காரணத்தினால் ஐயனாருக்கு அருகில் நீர்பாய்ச்சி கட்டக் கருப்பனுக்கு சிலை வைத்து காவல் தெய்வமாக மக்கள் வழிபடுகின்றனர். என்பதை,

“கண்மாய்த் தண்ணீர் கரும்பு, நெல்லு, கடலை, வெற்றிலை, காய்கறிகள், பயறுகள் என மாறிமாறி சம்சாரிகளைக் காப்பாற்றியது. மடைக்குடும்பன் கருப்பன் ஐயனாரப்பன் அருகிலேயே சிலையாகிப் போனான். கருப்பனின் முன்னால் தவறாமல் பொங்கள் பானைகள் பொங்கி வழிகின்றன. இடப்பக்கம் கண்மாய் வலப்பக்கம் வயல்கள். தண்ணீரின் சலசலப்பும், பறவைகளின் கொச்சட்டமும் அய்யனாரப்பனின் அருகாமையும் கருப்பன் காவல் தெய்வமாக மாறிப் போனான். கையெடுத்துக் கும்பிடாத ஜனங்கள் இல்லை.” இங்கு மக்களுடன் வாழ்ந்து, மக்களுக்காக நன்மை செய்தவர்களே காவல் தெய்வங்களாக வழிப்படப்படுகின்றனர் என்பதை உணர முடிகிறது.

### மழைவளச் சடங்குகளும் மழைத் தெய்வ வழிபாடும்

மழைச் சடங்கு நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்படும் வளமைச் சடங்குகளுள் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். வேளாண் தொழிலுக்கு அடிப்படையாக விளங்குவது மழை. கிராமங்களில் மழை பொய்த்து கடுமையான வறட்சி மற்றும் பஞ்சம் ஏற்படும் காலங்களில் மழையை வரவைக்க மழைச்சோறு உண்ணுதல் என்னும் சடங்கு நிகழ்த்துகின்றனர். மழைவேண்டி தங்களை உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் வருத்தி சடங்குகள் மேற்கொள்கின்றனர். இத்தகைய சடங்குகள் மூலம் வருணபகவான் கருணைக் கொண்டு மழை

பொழிவிப்பார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் உருவான ஒரு பண்பாட்டு நிகழ்வே 'மழைக்கஞ்சி' சடங்காகும்.

"இயற்கை நமக்கு உதவ வேண்டுமாயின் நாமும் இயற்கையைப்போல செய்து காட்டவேண்டும். நாம் செய்வதைப் பார்த்து இயற்கையும் அதே போலச் செய்யும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் நிகழ்த்தப் படுபவையே வளமைச் சடங்குகள்."என்ற மழை சடங்கு குறித்த விளக்கம் குறிப்பிடத்தக்கது. மழை இல்லாத சமயத்தில் மழை பெய்விக்க வேண்டியும், மழை மிகுந்து வீணாகும்போது மழையினை நிறுத்தவும் இறைவனை வேண்டி மக்கள் மேற்கொண்ட சடங்கு முறைகள் பண்டைக் காலம் முதல் ஒவ்வொரு நிலப்பகுதியிலும் அந்நிலத்திற்குறிய சூழலுடன் நடைப்பெற்றுள்ளதை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் உழவர்களால் மழை வேண்டி இச்சடங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவை மழைச் செம்பு எடுத்தல், மழைக்கஞ்சி காய்ச்சுதல், கொடும்பாவி கட்டி எரித்தல், ஒப்பாரி வைத்தல், போன்ற பல்வேறு பெயர்களில் மக்களால் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. மழையினை நம்பி விவசாயம் செய்யும் கரிசல் நிலப்பரப்பில் மழை பொய்த்துப்போகும் சூழலில் ஊர்மக்களின் ஒத்துழைப்போடு பெண்கள் முன்னெடுக்கும் சடங்காகும். ஊரிலுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் கூட்டாகச் சேர்ந்து, ஊரிலுள்ள அனைவரது வீடுகளுக்கும் சென்று ஊரார் தருகின்ற 'சோலக் கஞ்சி, வரகுச் சோறு, சாமைச் சோறு, கேப்பைக் களி, கேப்பைக் கூழ், பச்சை நெல் சோறு, அவித்த குருதவாலி சோறு, போன்றவற்றை சேகரித்து, ஊர் மந்தையிலோ அல்லது கண்மாய் கரையிலோ சென்று ஒரே பானையில் கஞ்சியாகச் சமைத்து உண்ணுகின்றனர். உண்டு முடித்தப்பின் கரிசல் வெக்கையில் உணவு உண்ட பெண்களை அங்கிருக்கும் ஆண்கள் துரத்திச்சென்று செருப்பினால் அடித்து அழ வைக்கவேண்டும். அவ்வாறு அழும்போது கண்ணீர் பூமாதேவியின்மேல் விழவேண்டும். பெண்கள் மழைவேண்டி அழுதுக்கொண்டே ஓடி ஒப்பாரி வைக்கவேண்டும் என்பது இச்சடங்கு. மக்கள் துயரினைக் கண்டு மழைத் தெய்வமானது மழையைப் பொழியும் என்னும் நம்பிக்கையோடும் வேட்கையோடும் வேண்டுதலோடும் இத்தகைய சடங்குகள் நிகழ்தப்படுகின்றன.

**மழை வழியனுப்பும் சடங்கு**

வேளாண் மக்களின் வாழ்வியலில் மழையை வழியனுப்பும் சடங்கு மிக முக்கியமானதாகும். விவசாயத்திற்கு தேவையான நீராதாரமான கண்மாய்கள், குளங்கள், ஊருணிகள் போன்றவை பெருகி நீர் கிடைத்தபின்பு மழைநீரைத் தேவையின்றி வீணாக்காமல் இருப்பதற்காக, மழையை நிறுத்த மழையை வழியனுப்பும் சடங்கைக் நிகழ்த்துகின்றனர். மழைநிறுத்தும் சடங்கு செய்வதற்கு 'தூள்மாவுசாமி' என்னும் தெய்வத்திற்குச் சடங்காற்றுதலாக மழைச்சடங்கு அமைகிறது. இதனை, "கண்மாய் நெறஞ்சுபோச்சு, ஊரணியும் பெருகிருச்சு, காடு பூராவும் வெதப்பு முடிஞ்சிருச்சு, வயக்காடு நடவு ஆரம்பிச்சாச்சு. இனி மழ எதுக்கு, போதும்ல்ல. பெறகென்ன வழியனுப்பியிற வேண்டியதான? இந்த மாசத்துக்குள்ள ஒரு நல்லநாளக் குறிச்சு வாங்குங்க, தொள்ளுசாமியக் கும்புட்டு மழைய நிப்பாட்டிருவம்." என்னும் வரிகள் மழை வேண்டிய அளவு பெய்து, நடவு, விதைப்பு வேலைகள் முடிந்துவிட்டதால், மழைத்தண்ணீர் வீணாகக் கூடாதென்று நல்லநாளில் கடவுளை வணங்கி பொங்கலிட்டு வழிபட்டு, மழை போதும் என்று தாங்கள் கைகளில் வைத்துள்ள மாவினை வானம் நோக்கித் தூவி மேகம் புகையாக மாறவேண்டி மழைச்சடங்கினை நிகழ்த்துகின்றனர். இச்சடங்கு மழைநீர் தேவை நிறைவுபெற்றபின் வீணாவதைத் தடுக்கும், இயற்கையுடன் கைக்குலுக்கும் முயற்சியாக நிகழ்த்தப்படுவதை அறிய முடிகிறது.

**மருத்துவம் மற்றும் நாட்டு வைத்தியம்**

கரிசல் மக்கள் நாட்டு வைத்தியத்தை பெரிதும் நம்புகிறார்கள். அவர்கள் மூலிகைகள், செடிகள் மற்றும் விலங்குகளின் பாகங்களைப் பயன்படுத்தி நோய்களைக் குணப்படுத்துகிறார்கள். அவர்கள் பாரம்பரிய மருத்துவர்களையும், நாட்டு வைத்தியர்களையும் நம்புகிறார்கள். சோ.தர்மன் தனது படைப்புகளில் இந்த நாட்டு வைத்திய முறைகள் மற்றும் பாரம்பரிய மருத்துவர்களைப் பற்றி எழுதுகிறார்.

அவர்கள் நோய்களைத் தீர்க்க மந்திரம் மற்றும் தாயத்துகளையும் பயன்படுத்துகிறார்கள். இது அவர்களின் நம்பிக்கைகள் மற்றும் சடங்குகளின் ஒரு பகுதியாகும்.

**மருத்துவம்**

ஒவ்வொரு மனித சமுதாயமும் தனக்கென ஒரு மருத்துவ முறையைக் கொண்டுள்ளது. நோயும் மருத்துவமும் மனித இனப் பண்பாட்டு வரலாற்றில் பிரிக்க முடியாதவை. மருத்துவத்தை அவ்வந் நிலமே நிர்ணயிக்கிறது. மனிதன் தான் உணர்ந்த உண்மைகளின் அடிப்படையிலும், பிறருடைய அனுபவ அறிவினாலும் இன்ன நோய்க்கு இன்ன மருந்து அல்லது மருத்துவம் என்பதனை உருவாக்கிக் கொள்கிறான். ஒரு சமுதாயத்தின் பழமை, வரலாற்றுச் சிறப்பியல்புகள் ஆகியவற்றை வெளிப்படுத்த வல்லவையாக அச்சமுதாயத்திலிருந்து, வெளிப்படுகின்ற பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், நாட்டுபுறக்கலைகள், வழிபாடுகள் மட்டுமல்லாது அச்சமூகத்தில் பின்பற்றுகின்ற மருத்துவ முறைகளும் அடங்குகிறது. அம்மருத்துவ முறைகள் சமுதாய வளர்ச்சிக்கும், வாழ்விற்கும், வரலாற்றிற்கும் பெருந்துணையாக நிற்கிறது என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

“நாட்டுபுற மக்கள் கையாளும் மருத்துவ முறைகளை நாட்டுபுற மருத்துவம் என்பர். இவை Folk Medicine, Ethno Medicine, Popular Medicine, Popular health culture, Ethnoiatry Ethnoiatrics. எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றன. தமிழக கிராமப்புறங்களில் நாட்டுவைத்தியம், கைமருத்துவம், பாட்டி வைத்தியம், மூலிகை மருத்துவம் என்றெல்லாம் கூறுவர். நாட்டுபுற மருத்துவம் அதற்கென வேத காலத்திலேயே நடைமுறையில் இருந்தது. அறிவியல் நாகரிக இயந்திர வளர்ச்சி பெற்ற காலத்திலும்கூட கிராமப்புறங்களில் நாட்டுபுற மருத்துவம் வழக்கில் இருந்தது குறிப்பிடத்தக்கது.” இவ்வாறு நாட்டுபுற மருத்துவம் உலகம் தோன்றிய காலம்முதலே இருந்து வந்திருப்பதை சு.சக்திவேல் பதிவு செய்கிறார்.

கரிசல்நில மக்கள் ஆங்கில மருத்துவத்தை அதிகமாக பயன்படுத்தாமல், தங்கள் நிலங்களில் விளையும் மூலிகைகளையும் மிளகு, சீரகம் போன்ற நறுமணப் பொருட்களையும் மருந்தாகப் பயன்படுத்தியுள்ளமை ஆசிரியர் சுட்டுகிறார். நாம் வாழும் இடங்களில் நம்மைச் சுற்றி பல உயிர்கள் வாழ்கின்றன. அவற்றில் ஆபத்தில்லாத உயிர்களும் ஆபத்தான உயிர்களும் நிறைந்து காணப்படுகின்றன. தீமை செய்யும் உயிரினங்களான தேள், வண்டு, பூரான், பாம்பு போன்றவை நம்மைச் சுற்றி காணப்படுகின்றன. கரிசல்நிலத்தில் வேளாண் மக்கள் காடுகளில் வேலை செய்யும்போதும் இத்தகைய விடப் பூச்சிகளின் தாக்குதல்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள அவற்றிற்கான மருந்துகளை நாட்டுபுற மக்கள் அறிந்து வைத்துள்ளனர். கரிசல் நிலத்தில் பாம்பு, தேள் போன்ற விஷக்கடிகளால் ஆபத்து நேர்வது தொடர்ந்து நிகழ்வதால் அவற்றின் விடத்திலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள நாட்டுப்புற மந்திர மருத்துவ முறைகளை பயன்படுத்துகின்றனர். மந்திர மருத்துவமான பார்வை பார்த்தல் குறித்து ‘வெளவால் தேசம்’ புதினத்தில் ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

“ஊர் ஊருக்குப் பார்வை பாக்கிற ஆட்கள் இருக்காங்க, அவங்ககிட்டப் போயி பார்வை பார்த்தா எப்படியான விடமும் தானா எறங்கிரும், அவங்க ஓசியிலதான் வைத்தியம் பாக்கணும். காசு வாங்குனா மந்திரம் பலிக்காது. அந்த மந்திரத்த அவங்க வேற யாருக்கும் சொல்லித்தர மாட்டாங்க, வாரிசுகளுக்கு மட்டுந்தா சொல்லித்தருவாங்க. பரம்பர பரம்பரையா வரும்.” என்று கரிசல் மக்கள் இத்தகைய மந்திர மருத்துவ முறையை கைக்கொண்டு வந்துள்ளது வெளிப்படுகிறது.

**முடிவுரை**

நாட்டுப்புற மக்களின் பழக்க வழக்கம் நம் நாட்டின் தொன்மையையும் மனித உணர்வுகளையும் வரலாற்றையும் பறைசாற்றுவதாய் விளங்குகிறது. அம்மக்களின் வாழ்வோடு ஒற்றிணைந்துள்ள நம்பிக்கைகள் அவர்களை வழிநடத்தியுள்ளன. நாட்டுப்புற மக்கள் கொண்டாடும் விழாக்கள் பண்பாடு, நாகரிகம் போன்றவை நிலைத்திருப்பதற்கும் வளர்வதற்கும் காரணிகளாக அமைந்துள்ளன இயற்கையால் நன்மை, தீமை ஏற்பட்ட பொழுது. அவற்றிற்கு நன்றி செலுத்தவும். அவற்றை அமைதிப்படுத்தவும் சடங்குகள்

மேற்கொள்ளப்பட்டுள்ளன. இயற்கை சார்ந்த அனுபவ அறிவின் வழியாக நாட்டுப்புற மக்களால் வழிவழியாக தொடர்ந்து வந்துள்ளது நாட்டுப்புற மருத்துவம் இன்றைய நாகரிக உலகில் மக்களின் வாழ்வில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் மரபுகளான நம்பிக்கை பழக்க வழக்கம். சடங்கு விழா போன்றவற்றை அவர்கள் பின்பற்றி வருவதை 'சோ.தர்மன் புதினங்களின்வழி இக்கட்டுரையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

**பார்வை நூல்கள்**


1. தர்மன். சோ., சூல், 2016 அடையாளம் பதிப்பகம் திருச்சி.
2. தர்மன். சோ., ,கூகை, 2015 அடையாளம் பதிப்பகம் திருச்சி.
3. தர்மன். சோ., பதின்மூன்றாவது மையவாடி, 2019 அடையாளம் பதிப்பகம் திருச்சி.
4. தர்மன். சோ., தூர்வை, 1996 அடையாளம் பதிப்பகம் திருச்சி.
5. தர்மன். சோ., வௌவால், 2021 தேசம் அடையாளம் பதிப்பகம் திருச்சி.
6. நாலடியார் உரைவளம் 1980, சரசுவதி மகால் நூல்நிலையம், தஞ்சாவூர்.
7. பாக்கியமேரி., தமிழர் பண்பாடும் பயன்பாடும், 2017, பூவேந்தன் பதிப்பகம், சென்னை.
8. டாக்டர் சு சக்திவேல்., நாட்டுப்புற இயல் ஆய்வு, 2019, மணிவாசகர் பதிப்பகம் சென்னை.
9. இராஜேந்திரன் அ., நாட்டுப்புற பண்பாட்டு பழக்கவழக்கங்கள், 2017, திருமலா பப்ளிகேஷன்ஸ் சென்னை.
10. காந்தி கா., தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், 2008 , உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை.


**REFERENCES:**


1. Tharman. So., Sool, 2016 Identity Publishing House Trichy.
2. Tharman. So., ,Kookai, 2015 Identity Publishing House Trichy.
3. Tharman. So., Thirteenth Main, 2019 Identity Publishing House Trichy.
4. Tharman. So., Doorvai, 1996 Identity Publishing House Trichy.
5. Tharman. So., Bat, 2021 Desam Identity Publishing House Trichy.
6. Naladiyar Urivalam 1980, Saraswathi Mahal Library, Thanjavur.
7. Pakiyameri., Tamil Culture and Use, 2017, Bhuvendan Publishing House, Chennai.
8. Dr. Su Sakthivel., Folklore Research, 2019, Manivasagar Publishing House, Chennai.
9. Rajendran A., Folk Cultural Customs, 2017, Tirumala Publications Chennai.
10. Gandhi K., Tamil Customs and Beliefs, 2008, World Tamil Research Institute, Chennai.


**Copyright (c) Author**
**Creative Commons License This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.**